BTA
BERGEN TAMILSK AVIS
# தேன்தமிழிதழ்
Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.
Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



## உறவுகளுக்கு வணக்கம்

இம்மாத தேன் தமிழ் இதழ் இரண்டு ஆண்டுகளைத் தொட்டு நிற்கிறது என்பது மனதில் மட்டற்ற மகிழ்வை தருகிறது.

நோர்வேயில் பல பாகங்களிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தம்மால் இயன்றவரை சகல துறைகளிலும் தமது பணிகளை ஆற்றி வருகின்றார்கள். இலக்கிய ஆர்வலர்கள் பலர் தமிழ்மொழியில் பத்திரிகைகள், இதழ்கள் பலவற்றினை வெளிக் கொணர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.
ஆயினும் தற்போதைய சூழலில் எமக்கு எட்டியவரை நோர்வேயில் தமிழில் எழுத்துப்பிரதி எதுவும் தொடர்ச்சியாக வெளிவருவதாக இல்லை.

பல இடங்களில் தமிழ் வானொலிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.
ஆனால் மிக முக்கிய ஊடகமான பத்திரிகை இல்லையே என்பது எமது நீண்ட கால ஆதங்கம். நாம் வாழும் நாட்டினதும், ஏனைய உலக நாடுகளினதும் சமூக கட்டமைப்பு, அவற்றுள் அன்றாடம் நிகழும் மாற்றங்கள், சவால்கள் போன்ற அவசிய விடயங்களை எழுத்திலக்கியம் ஊடாக மக்கள் வசம் சேர்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

அதன் வழி பல்வேறு பயனுள்ள இலக்கியப் படைப்புக்களை எமது மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும். நமது அடுத்த சந்ததியினரின் சிந்தனைகளை வெளிக்கொணர்தல், அத்தோடு அவர்களது தமிழ் மொழிப்பற்றை வளர்க்க வேண்டும் என்ற முனைப்பு. இவை தான் இந்த தேன் தமிழிதழ் வெளிவர அடிப்படைக் காரணிகளாகும்.

2020ஆம் ஆண்டு கொரோனா தொற்றுநோயால் உலகமே முடங்கிக் கிடந்தது. தொடர்பு ஊடகங்கள் மட்டுமே தேவையான தகவல்களைத் தாங்கி வந்தன. குறிப்பாக நாம் வாழும் நாட்டு அரசு, மாநகரசபை, சுகாதார திணைக்களம், மருத்துவ மனைகள், மருத்துவர்களின் ஆலோசனைகள் அனைத்தையும் டிஜிட்டல் தொடர்பு ஊடகங்கள் எம்மிடம் சேர்த்தன.

இருந்தாலும் நோர்வே போன்ற புலம்பெயர் நாடுகளில் வாழும் வெளிநாட்டு மக்களுக்கு இந்நாட்டின் முக்கிய பல தகவல்கள் சென்றடைவதில்லை என்பது ஊடகங்களின் விமர்சனமாக இருந்தது. அதற்கான அடிப்படைக் காரணம் வெளிநாட்டு மக்களுக்கு மொழி ஆளுமை இன்மையேயாகும். அதனால் இங்கு வாழும் வெளிநாட்டு மக்களுக்கு அதிகம் கொரோனா நோய் தொற்றுகிறது எனவும் பேசப்பட்டன. அவற்றுள் தமிழர்களும் அடங்கினர்.

மேற்குறிப்பிட்ட முக்கிய தகவல்களை நமது தாய் மொழியிலேயே நமது மக்களுக்கு கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்பணியினை இவ்விதழ் ஆற்றியுள்ளது என நம்புகிறோம்.

கடந்த இரு ஆண்டுகளும் தேன் தமிழ் இதழ் வெளிவருவதில் பல்வேறு சவால்கள் இருந்தன. இருந்தாலும் சிறிதும் சோர்வடைந்துபோகாது சிறந்த பல பயனுள்ள ஆக்கங்களுடனும், வடிவமைப்புடனும் வெளி வருகின்றமை எமது வாசகர்களிடமிருந்து வரும் விமர்சன குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.

எந்த ஒரு இலக்கியப் படைப்பும் முதலில் மக்களுக்கு விளங்க வேண்டும். அவை அவர்கள் மனங்களை தொடவேண்டும். அந்த வகையில் தேன்தமிழ் இதழில் வெளிவந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள், கண்ணோட்டங்கள், செய்திக் குறிப்புகள், சிறுவர் பக்கங்கள் அனைத்தும் மக்களோடு பேசின என நம்புகிறோம்.

இவ்விதழ் சிறப்பாக பயனுள்ளதாக நடைபோட பல படைப்பாளிகள் மிகவும் உற்சாகமாக ஆக்கங்களை தொடர்ச்சியாக பதிவு செய்து வருகிறார்கள்.

முதல் பிரதியிலிருந்து இன்றுவரை பல்வேறு ஆக்கங்களை எமக்கு தொடர்ச்சியாக அனுப்பிவரும் எழுத்தாளர்களும் பலர் உள்ளனர். அதுவே எமக்கு பெரும் சக்தியாக விளங்குகிறது.

தேன் தமிழிதழ் வளர எம்மை தட்டிக்கொடுத்து நல்ல ஆலோசனைகள் தரும் உறவுகளுக்கும், ஆக்கங்களை தந்துவரும் படைப்பாளிகளுக்கும், இனிய வாசகர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேன் தமிழிதழானது தொடர்ந்தும் பயனுள்ள படைப்புக்களோடு வலம்வர உங்கள் உற்சாகமான ஆதரவினை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

**தேன் தமிழிதழ்**
*Ansvarlig redaktør: Julius Antoni*
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA
BERGEN TAMILSK AVIS

# நம்பிக்கையை வளர்க்கும் தைப்பொங்கலாக....



**சிவா முருகுப்பிள்ளை**

உறவுகள் அனைவருக்கும் இனிய தை பொங்கல் வாழ்த்துக்கள். பற்றாக் குறையிலும் இருப்பதை பகிர்ந்து கொண்டாடும் சூழலில் நாம் பொங்கலை கொண்டாடும் நிலமையில் உள்ளோம். வெகு சீக்கிரத்தில் இதிலிருந்து மீண்டெழுவதற்கான ஒளிக் கீற்றுகளை நம்பிக்கைகளாக மட்டுமே நாம் கொண்டு முன்னேற வேண்டிய காலம் இது.

முன்பு எப்போதையும் விட மனிதனின் வாழ்விற்கான மிக அடிப்படையான தேவைகளான மூன்று "உ" களில் உணவை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சுய உற்பத்தி அதில் விசேடமாக உணவு உற்பத்தி என்பதை நாம் எல்லோரும் எம்மளவில் முடிந்தளவில் செய்தாக வேண்டிய சூழலில் நாம் உள்ளோம்.

இந்த சுய சார்புப் பொருளாதாரத்தில் நாம் கடக்க வேண்டிய தூரம் அதிகமாயினும் நாம் நம்பிக்கையுடன் செயற்பட்டால் சாதிக்க முடியாது என்று ஏதும் இல்லை என்பதை நீங்கள் அறுவடை நாட்களில் நிச்சயம் உணர்வீர்கள்.

கடந்த தைப் பொங்கலில் இருந்த பொருட்களின், உணவுப் பொருட்களின் விலை ஒரு வருடம் கடந்து வந்த இந்தத் தைப் பொங்கலில் மூன்று மடங்கிற்கு மேலாக உயர்ந்து நிற்கின்றது. ஆனால் வருமானங்களில் அதிக மாற்றம்... ஏற்றம்... இல்லை. வேலை இழப்புகள் ஏற்பட்டும் வருகின்றன.

இதற்குள் "வாரிசு" ஆக நின்று "துணிவு" ஆக பால் அபிஷேகம் செய்யும்.... இதனையும் விட முக்கியமான அலுவல்களை மறந்த இளசுகளின் செயற்பாடுகள் சற்று எரிச்சலை ஏற்படுத்துகின்றது.

இந்தப் பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீட்டுவருதற்கு இருப்பவர்கள் சேமிப்பில் இருந்து செலவு செய்யலாம் என்ற வாதத்தை முன்வைத்தாலும் அது எவ்வளவு நாட்களுக்குத் தாக்கு பிடிக்கும் என்பது முக்கிய கேள்வியாகி நிற்கின்றது. இது சரியான பொருளாதார வாதமும் அல்ல.

இதற்கு அப்பால் எம்மில் எத்தனை பேரிடம் போதியளவு சேமிப்பு உள்ளது என்ற கேள்வி இங்கு பிரதானமாகின்றது.
இதற்கும் அப்பால் உறவுகளாக பிள்ளைகளாக புலம் பெயர் தேசத்தில் இருந்து வரும் டாலர்கள் அவர்கள் நாடுகளில் ஏற்பட்டுள்ள பண வீக்கம், வட்டி விகித அதிகரிப்பு, பொருட்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றால் ஆட்டம் காணத் தொடங்கியும் விட்டது.
இதனை வருட முடிவு, தொடக்கத்தில் என்று ஒரு கிழமை மட்டும் கொண்டாடும் நத்தார், புதுவருட கொண்டாட்டங்களில் மக்கள் அதிகம் பரிசுப் பொருட்களை வாங்காது தவிர்த்த நிலமையில் இருந்து அறியவும் முடிந்தது. அங்காடிகள் பாதிக்கு மேல் வெறிசோடிக் கிடந்தன கிடக்கின்றன.

எனவேதான் இந்த பொருளாதார சிக்கலில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள எமது அன்றாட உழைப்புகளுடன் பகுதியாக உணவு உற்பத்தியில் நாம் ஈடுபட்டாக வேண்டும். அது எவ்வளவு சிறிய முயற்சியாக இருந்தாலும் பரவாய் இல்லை.

இலங்கை போன்ற தட்ப வெப்ப நாடுகளில் 12 மாதமும் பயிர் வளர்க்கக் கூடிய சூழல் இருப்பதும் அதற்கான நீர் ஓரளவிற்கு கிடைப்பதும் மிகப் பெரிய வரபிரசாதம்.

இந்த வாய்ப்புகள் அதிகம் இல்லாத குளிர் பிரதேச வாழ்வில் நாம் இதனை ஒப்பீட்டு அடிப்படையில் அதிகம் உணர முடிகின்றது.
இந்த உணவு உற்பத்தியிற்கு தேவையான ஆதார சக்தியை வழங்குபவன் சூரியனே. அவர் இன்றி ஏதும் இல்லை. மழை இல்லை, வெயில் இல்லை காற்று இல்லை, காதலும் இல்லை.

எனவே எமக்கான ஆற்றல் சக்தியை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் தைப் பொங்கலை அதனை ஆதாரமாக வைத்து உணவு உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பாளிகளை கொண்டாடுவதற்கு, அவர்களுக்கு நன்றி தெரிவித்து கௌரவிப்பதற்காக இந்த கஷ்டமான சூழலிலும் தைப் பொங்கலை இருக்கும் பொருட்களை வைத்து கொண்டாடுவோம். அதனை மற்றவர்களுடன் பகிர்ந்தும் கொண்டுவோம்.

ஆடம்பரங்களை வீணாக்குதலைத் தவிர்த்து எந்த ஆதாரங்களும் இல்லாவர்களுக்கு தானமாக இல்லாமல் பகிர்தல் என்ற அடிப்படையில் எம்மால் முடிந்த அளவில் அவர்களுக்கு தேவையான அடிப்படையான பொருட்களை அது உணவுப் பொருட்களாக உடைகளாக பகிருவோம்.

அதிலும் சிறப்பாக குழந்தைகள் இந்த பொருளாதார சிக்கல்களை புரிந்து கொள்ள முடியாத வெள்ளந்தியாக இருப்பதினால் அவர்கள் மனிதில் நம்பிக்கை ஏற்படுத்தும், உற்சாகத்தை ஏற்படுத்தும் தை பொங்கலாக இதனை கொண்டாடுவோம். எங்களுக்கும் காலம் வரும் என்று வெறுமனவே சும்மா இருந்துவிடாமல் பசுமையாக புரட்சி செய்வதன் மூலம்தான் இதனை நாம் செய்ய முடியும்.

விதைப்பவர்களாக நாம் இருப்போம் அதற்கான அறுவடையை எமது சந்ததியினர் பெற்றுக் கொள்ளட்டும்.
விதைத்தால் சூரியனும் அது சார்ந்த மழையும் விதையைப் பயிராக்கி மரமாக்கி காய், கனி, குழை என்று எல்லாம் தரும். எனவே விதைப்போம் விதைகளை... நல்ல கருத்துகளை.... நம்பிக்கைளை.... இல்லாமையும்.... எல்லாமையும் எல்லோருக்கும் பொதுவானதாக எண்ணி பகிருதல் இங்கு இந்த தை பொங்கலில் முதன்மையாகின்றது.



# 2023: எதிர்பாராததை எதிர்பாருங்கள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

புத்தாண்டு பிறந்திருக்கிறது. புதிய நம்பிக்கைகள், எதிர்ப்பார்ப்புகளோடு எல்லோரும் ஆண்டைத் தொடங்கியிருப்பார்கள். மிகுந்த சவால்களோடு இவ்வாண்டு பிறக்கிறது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து கொஞ்சம் மீண்டிருப்பது போல தெரிவது ஒரு தோற்றமயக்கமே என்பதை உணரும் காலம் தூரத்தில் இல்லை. உலகளாவிய பொருளாதார மந்தநிலை 2022யை விட மோசமாக இருக்கும் என்ற எதிர்வுகூறலை எல்லோரும் ஒரே குரலில் மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். நோர்வேயில் இருப்போர் அனுபவிக்கும் குளிர் பற்றிய ஒரு ரம்மியமான கற்பனை இலங்கையர்களுக்கு உண்டு. ஆனால் குளிர் எவ்வளவு மோசமானது என்பதை இலங்கையில் திடீரென மாற்றமடைந்த வெப்பநிலை காட்டி நின்றது. இது எதிர்பாராதது. எல்லாவற்றிற்கும் மேலாக காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை நாமெல்லோரும் அனுபவித்துத் துன்புறவேண்டி வரும் என்பதற்கான ஒரு முன்னோட்டமாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளின் உடனடி எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக கொரோனா பெருந்தொற்று இருந்தது. இந்த ஆண்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இப்போதைக்கு உக்ரேன் போர் இருக்கிறது. இந்தப்போர் எவ்வாறு பயணிக்கும் என்று தெரியாது. ஆனால் இப்போர் ஏற்படுத்தியுள்ள பொருளாதார நெருக்கடி பல்மடங்காகி சேதங்களை விளைவிக்கும் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். கடந்த ஓராண்டாக அனைத்து நெருக்கடிகளின் பழியும் உக்ரேன் யுத்தத்தின் மீதானதாகவே இருந்தது. மேற்குலகால் இது வெல்லமுடியாத யுத்தம் என்ற நிலையை நோக்கிக் களநிலைமைகள் நகர்த்துகின்றன. அண்மைக்காலம் வரை மேற்குலக ஊடகங்களில் பிரதான தலைப்புச் செய்தியாக இருந்த இந்த யுத்தம், இப்போது கவனமிழக்கத் தொடங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் தீவிரம் மேற்குலக நாடுகளில் போருக்கெதிரான மனநிலையைத் தூண்டி விட்டுள்ளன. இதேவேளை இன்னும் கொரோனா பெருந்தொற்று முடியவில்லை என்பதை கொரோனாவின் புதிய திரிபின் பரவுகை காட்டி நிற்கிறது. கொரோனா இப்போது ஏன் பேசுபொருளில்லை என்ற வினா இயல்பானது.

கடந்தாண்டு இறுதியில் பிரபலமான கொரோனா தடுப்பூசியான பைஸரை உற்பத்தி செய்த நிறுவனம் ஒரு உண்மையைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டது. “கொரோனாத் தடுப்பூசிகள் பரவலைத் தடுக்கவல்லன அல்ல. இதை நாங்கள் பரிசோதித்துப் பார்க்கவில்லை”. என்று ஐரோப்பியப் பாராளுமன்ற விசாரணையில் பைஸர் நிறுவனம் வாக்குமூலம் அளித்தது. ஒரு பொய்யின் மீது தடுப்பூசி வர்த்தகம் கட்டமைக்கப்பட்டது என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தாண்டு ஏராளமான வேலையிழப்புகளோடு தொடங்கியிருக்கிறது. குறிப்பான தொழில்நுட்ப நிறுவனங்கள் 2023யை பணிநீக்கத்தோடு தொடங்கியுள்ளன. ஜனவரி 4ம் திகதி அமேசன் 18,000 பேரை பணிநீக்கம் செய்வதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து மைக்ரோசொவ்ட் 10,000 பேரையும் கூகிள் 12,000 பேரையும் பணிநீக்கம் செய்வதாக அறிவித்தது. ஜனவரி மாதத்தின் முதல் இருபது நாட்களுக்குள் தொழில்நுட்பதுறையில் 200,000க்கும் மேற்பட்டோர் வேலையிழந்துள்ளனர். கடந்தாண்டு இறுதியில் பேஸ்புக் நிறுவனம் 11,000 பேரைப் பணிநீக்கம் செய்ததோடு இன்னும் பலர் இவ்வாண்டு பணிநீக்கப்படுவர் என்று அறிவித்துள்ளது. தொழில் நுட்பத்துறையின் பாரிய அளவிலான பணிநீக்கங்கள் ஒரு தெளிவான செய்தியைச் சொல்கின்றன. இன்னும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கான முன்னோட்டமாக இதைக் கருதமுடியும். இந்த பணிநீக்கங்கள் ஏனைய துறைகளைப் பாதிக்கத் தொடங்கியுள்ளது. ஏனைய துறைகளுக்கும் இது மெதுவாகப் பரவுகிறது. உலகின் பிரபலமான வங்கியான கோல்ட்மன் சாக்ஸ் (2008 பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான வங்கிகளில் ஒன்று) ஜனவரியில் முதற்கட்டமான 3,200 பேரைப் பணிநீக்கம் செய்தது. இன்னும் பலர் தொடர்ந்து பணிநீக்கப்படுவார்கள் என்று அறிவித்துள்ளது. இவ்வாண்டு உலகளாவிய ரீதியில் மிகப்பாரிய எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பணிநீக்கப்படுவார்கள் என்றும் இதன் மிகச்சிறிய பகுதியே இப்போதைய செயற்பாடுகள் என உலக தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனவரி 10ம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்ட உலக வங்கி, எச்சரிக்கை மணியை ஒலித்தது. அவ்வறிக்கை "பலவீனமான பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில், புதிய பாதகமான களநிலவரங்கள் காரணமாக (எதிர்பார்த்ததை விட அதிகமான பணவீக்கம், அதைக் கட்டுப்படுத்துவதற்கான வட்டி விகிதங்களில் திடீர் உயர்வு, கொவிட்-19 தொற்றுநோயின் மீள் எழுச்சி, அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதட்டங்கள்) உலகப் பொருளாதாரம் மந்தநிலைக்கு செல்லும். 80 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே தசாப்தத்திற்குள் இரண்டு உலகளாவிய மந்தநிலைகள் ஏற்படுவது இதுவே முதல் முறையாகும்" என்று தெரிவிக்கிறது.

இது "அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பல ஆண்டு கால மெதுவான வளர்ச்சியை எதிர்கொள்கின்றன. அதிக கடன் மற்றும் பலவீனமான முதலீடுகளால் மிகவும் உயர்ந்த அரசாங்கக் கடன்களின் விளைவால் அரசுகள் அடிப்படைச் சேவைகளையே வழங்க இயலாமல் போயுள்ளது. இந்தப் பலவீனம் கல்வி, சுகாதாரம், வறுமை மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் ஏற்கனவே பேரழிவை ஏற்படுத்தும் மாற்றங்களை இன்னும் மோசமாக்கும்" என்று இவ்வறிக்கை எதிர்வுகூறுகிறது.

உலகளாவிய ரீதியில் உணவுப்பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன. அடிப்படை உணவுப்பொருட்களின் குறைந்தது 10%வரை அதிகரிக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதேவேளை உணவுப்பொருட்களின் விலைகள் எதிர்பார்ப்பதை விட அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை. உலகளாவிய சக்தி நெருக்கடி மின்சாரத்தின் விலையைப் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் உணவுப்பொருட்களின் விலை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு ஒரு நீண்ட சங்கிலித் தொடர் போன்ற விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பானது மத்திய வர்கத்தினரின் இதர தேவைகளில் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இதனால் உணவு தவிர்ந்த ஏனையவற்றின் நுகர்வு குறைந்துள்ளது. இதனால் உற்பத்தி பாதிக்கபடுகிறது, அது வர்த்தகத்தைப் பாதித்து இலாபத்தில் குறைவை ஏற்படுத்த வேலையிழப்புகளைத் தூண்டுகிறது. வேலையிழப்புகள் மக்களை வீதிக்குக் கொண்டுவருகின்றது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து உலகம் முழுவதும் 113 நிறுவனங்கள் ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளன.

உலகளாவிய சக்தி நெருக்கடி உலகளாவிய அபிவிருத்தியை பல பத்தாண்டுகள் பின்னோக்கித் தள்ளும் அபாயம் எம் கண்முன்னே உள்ளது. 75 மில்லியன் மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும்

வசதி இருந்தும் மின்சார விலைகள் காரணமாக அவர்களால் மின்சாரத்தைப் பயன்படுத்தவியலாமல் உள்ளது. 100 மில்லியன் மக்கள் மின்சாரப் பாவனையைத் தவிர்தது ஏனைய மாற்றுவழிகளுக்குச் சென்றுள்ளனர். இன்று உலகில் போதுமான தூய சக்தி மூலங்கள் இல்லை. உலகம் பழையபடி சுவட்டு எரிபொருட்களுக்குச் செல்கிறது. இது காலநிலை மாற்றத்தில் மிகப்பாரிய நெருக்கடியைக் கொடுக்கும்.

இதன் பின்னணியிலேயே இலங்கையின் எதிர்காலம் குறித்து நோக்க வேண்டும். இலங்கை இன்னமும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவில்லை. மீண்டது போன்றதொரு தோற்றமயக்கம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியமே (ஜஎம்எவ்) இந்த நெருக்கடிக்கான சர்வரோக நிவாரணி என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் யாரும் கடனுக்குக் கடன் வாங்குவது எவ்வாறு தீர்வாகும் என்று சொல்ல மறுக்கிறார்கள். ஜஎம்எவ்வும் அதன் ஆதரவாளர்களும் செய்ய முனைவது நாட்டை என்றென்றும் கடனாக வைத்திருப்பதே. இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஏகாதிபத்திய கொள்ளையில்லா சுயசார்பு தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பார்வைதான் தேவை. வீணான நுகர்வோர் மற்றும் அதன் அடிப்படையிலான வளர்ச்சியின் கருத்துகளை நிராகரிக்க பொருளாதார முன்னுரிமைகள் மறுவேலை செய்யப்பட வேண்டும். தேசிய இனங்கள் மற்றும் சிறுபான்மை இனக் குழுக்களின் ஒற்றுமை பொருளாதார மீட்சிக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் இன்றியமையாதது, மேலும் கடந்த கால அச்சத்தை போக்கும் வழிகளில் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு என்பது சாராம்சமானது.

பொருளாதார நெருக்கடிகள் பொதுவாக பொருளாதாரச் சுரண்டலை அதிகரிக்கவும் புவிசார் அரசியல் செல்வாக்கைப் பெறவும் வெளிப்புற சக்திகளுக்கு வழிகளை வழங்குகின்றன. இலங்கை சூழலில், இது இந்தியா, அமெரிக்கா, சீனா மற்றும் நிச்சயமாக அமெரிக்காவின் பினாமிகளை உள்ளடக்கியது. ஜஎம்எவ் கேட்டுக்கொண்டுள்ளபடி இலங்கையில் கட்டமைப்பு மாற்றங்கள் செய்தாக வேண்டும். இது தனியார்மயமாக்கல், எஞ்சியுள்ள சமூக பாதுகாப்புத் திட்டங்களை வெட்டுக்கள் மற்றும் மேற்கத்திய நலன்களுடன் பொருளாதாரக் கொள்கையை சீரமைத்தல் என்பன முக்கியமானவை. இவை உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு தீங்கு விளைவிக்கும், அதே நேரத்தில் செல்வம் மற்றும் வருவாய் ஏற்றத்தாழ்வை விரிவுபடுத்தும். இலங்கையில் எஞ்சியுள்ள இலவசக் கல்வியும் இலவச மருத்துவமும் எமது கையை விட்டுப் போகும் நாள் தொலைவில் இல்லை. எனவே எதிர்பாராததை எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் பொருளாதாரக் குறிகாட்டிகள் மோசமாக உள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் 60%க்கும் அதிகமானோர் முறைசாராத் துறையைச் சார்ந்து வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர், கூலித் தொழிலாளர்கள், அன்றாடங் காய்ச்சிகள். இவர்களுக்கான அரச உதவிகள் நிறுத்தப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டத்தின் அண்மைய அறிக்கையின்படி, 40% குடும்பங்களின் வருமானம் முக்கியமாக தினக்கூலி மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் 50%மாகக் குறைந்துள்ளது, அதே சமயம் உணவு விலைகள் இரட்டிப்பாகும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இழவு வீட்டில் கொண்டாட்டக் கனவு மாதிரி, அடிப்படைத் தேவைகளுக்கே இலங்கையர்கள் அல்லற்படுகையில் அரசாங்கம் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு 200 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது. இலங்கையின் அரசியல் எதிர்காலம் என்பது வளமானதாய் இல்லை என்பதை கடந்த ஆறுமாத கால நிகழ்வுகள் காட்டுகின்றன. நிறுவனமயப்பட்ட ஊழலும், சட்டத்திற்கு மேலான அரசியல்வாதிகளும், சிங்கள பௌத்த பேரினவாதமும் ஒருங்கே இணைந்த விசக்கலவையே இன்றைய இலங்கையின் அரசியல் கதையாடலாக உள்ளது. எல்லாம் நல்லபடியாய் நடக்கும் என்று நம்பச் சொல்பவர்களுக்குச் சொல்லக் கூடியது ஒன்றுதான். நம்பிக்கைக்கும் மூட நம்பிக்கைக்குமான வேறுபாடு நூலிழையளவே.

இக்கட்டுரையை வாசித்து முடித்தவுடன் நிச்சயமின்மையும், ஒருவிதப் பய உணர்வும் ஏற்பட்டால் நான் சொல்லவிரும்புவது, காலம் போகப் போக இன்னும் பயங்கரமாக இருக்கும். •

# ஆத்தாடி பாவாட

**மல்லிகா**

பாவாடை பற்றி
கவிதை கேட்கிறார் ஒருவர்....
அவர்
பாலாடையை மறந்து இருப்பார் போலும்...

கொதி நிலையில் பதியென மாறி
மதி மயங்கும் நேரத்திலும்
தன்மானத்தோடு தன் மீது
ஆடை ஏற்படுத்திக் கொள்ளும்
உன்னதமான பாலாடை பற்றி
எழுதுகிறேன் நான்....

பாவாடை பாக்களின் ஆடை.
உட்பொருள் வைத்து
வார்த்தைகளுக்குள் மறைத்து..
வரிகளாய் அமைத்து வடித்த
கவிதையை வாசித்துப் பாரடா

உட்பொருள் புரிந்தால்
உன் உணர்வுகள் கொதிக்கும்....
உண்மை நிலை புரியும்

பன்னாடைகளைப் பற்றி
எழுதவே நேரம் போதவில்லை
இதில் நான்
பாவாடையை பற்றி எப்படி எழுத....

வயது ஒடிக்களைத்த பின்னாலும்
வாசம் பிடிக்க இத்தனை அலைச்சல்

பாவாடைக்குள் இருந்து வந்து
பாலாடையால் பாலுண்டதை மறந்த
பன்னாடை மேலாடை இன்றி திரிகிறது....

பாலுணர்வை முன்னில் வைத்து
பாவையை பகுத்து வைக்கிறது
தறி நூலில் புரி நூல் தரித்தது....
புரியாமல் தலை விரித்து ஆடுகிறது..

எச்சரித்தும் பயனில்லை.
அவர்கள் அப்படித்தான்.

# உவகைதரும் நாள்



நீர் பொழிந்து நிலம் விளைந்து
கதிரறுத்து களம் நிறைத்து
உயிரனைத்தும் மகிழ வைக்கும்
உழவனுக்கோர் நாள் தைத்திருநாள்

இயற்கையினை வயப்படுத்தி
இணையில்லாப் பயிராக்கி
வாழ்வு பொங்க வளம் பொங்க
வந்ததிந்த தைத்திருநாள்

பசியளிக்கும் பணிபுரிந்து
பார்சிறக்கப் பயிர் விளைத்த
உழவன்தன் மனம் களிக்கும்
உயர்வான தோர் நன்நாள்

உவகைதரும் தைத்திருநாள்
ஏழைமனம் நிறைந்தேற்றமுறவே
நாளை வரும் நலமென்று
நம்பி இருந்தவர்க்கு
தைமகளாய்ப் பூவுலகில்
தவழ்ந்துவரும் தைப்பொங்கல்

வறுமை என்னும் கொடுமை
வையகத்தில் இல்லாதழிந்து
அனைத்துயிரும் பசி நீங்கி
அன்பு தழைத் தோங்கிடவே
அகிலமெலாம் பொங்கும்
அந்நாளே தைத்திருநாள்

**மல்லிகா**




அர்ப்பணிப்புடன் பிரசவிக்கும் அரங்காற்றுகைகள் இரசிகர்களை மெய்சிலிர்க்க வைக்கும்... வியந்துருக வைக்கும். அப்படியாக என்றுமே நடனக்கலைஞர், ஆசிரியர் கவிதாலட்சுமியின் அரங்காற்றுகைகள் இரசிகர்களை ஏமாற்றுவதில்லை. சபை நிறைந்த இரசிகர் கூட்டம் ஆசிரியரோடு இணைந்து அவரது மாணவர்களில் சிறிய குழந்தைகள் கூட அர்ப்பணிப்புடன் தான் செயற்படுகிறார்கள்.

ஆடும் நடனத்தை ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்துச் சுவைத்துக் கிறங்கி ஆனந்தித்து ஆடுகிறார்கள். இரசிகர்களைச் சொக்கிப் போய்க்கிடக்க வைக்கிறார்கள். ஆடையணிகள், மேடையலங்காரம், ஒளிவீச்சுக்கள், பாடல்கள், இசை அத்தனையும் அபாரம். ஒவ்வொரு ஆற்றுகை முடிவிலும் கரகோசம் விண்ணைப் பிளந்தது. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடியதாகக் கூறப்படும் கொடுகொட்டி, குடை, குடம், அல்லியம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பாவை, பேடி, மரக்கால் எனும் பதினோராடல்களும் அரங்கம் ஒன்றில் இடம் பெற்றது. இசையும், ஒளியும், அபிநயங்களும், முகபாவங்களும், ஆடையலங்காரங்களும் ஒன்றுடன் ஒன்று இயைந்து கலந்து பதினோரு ஆடல்களும் அற்புதமாக அரங்கேறின.

அரங்கம் இரண்டில், ஓவியர் இரவிவர்மாவின் ஓவியங்கள் கதைகளுடன் கூடி நாட்டிய நாடகமாக அரங்கேறியது. கவிதா தனக்கென அகத்தில் ஒரு இலக்கியப் பேருலகம் வைத்திருக்கிறார். அதில் ஆழ்ந்த பொருள் தேடிச் சுவைத்து தான் அனுபவிக்கும் இனிப்பினை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கத் தவறுவதில்லை.

பல வருடங்களுக்கு முதல் கவிதா, நாங்களிருவரும் காரில் சென்று கொண்டிருக்கும்போது இரவிவர்மாவின் ஓவியத்தைக் கருப்பொருளாக எடுத்து நடனம் அமைக்க வேண்டும் என்று சொன்னார். அப்பொழுது எனக்குத் தோன்றியது இது சாத்தியமா? அவருடைய



ஓவியங்களை எப்படி உயிரோவியங்களாகக் காட்ட முடியும் என்று. ஆனாலும் கவிதாவின் அரங்காற்றுகைத் திறமை அறிந்ததால் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன்.

வார்த்தைகளில் விவரிக்க முடியாத வகையில் இரவிவர்மாவின் உயிரூட்டமான தூரிகை ஓவியங்களை உயிரோவியங்களாகக் கொண்டு வந்து நிறுத்தினார்.
ஒவ்வொரு பெரிய பெரிய சட்டங்களுக்குள்ளும் உயிரோவியங்கள். ஆடை, அணி, அலங்காரம் எல்லாம் அவர் ஓவியங்களுக்கு இணையாகப் பார்த்துப் பார்த்துச் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஓவியப்பாவையும் மற்றவர்கள் ஓவியமாக நின்றிருக்க முறையே தனித்தனியாக வந்து அற்புத நடனத்தை வழங்கி விட்டு மீண்டும் உயிரோவியமாய்ப் போய் சட்டத்தின் பின் நின்றார்கள். பின் அனைவரும் இணைந்து ஆடினார்கள்.

முதலில் இரவிவர்மா வருகை ஒரு பொன்னிற ஆடை நடனப் பெண்ணுடனும், கண்கவர் வண்ணங்கள் அணிந்த நடனப் பெண்களுடனும் மெய் சிலிர்க்கும் வண்ணம் ஆரம்பமானது. உயிரோடு இரவிவர்மாவைப் பார்த்த நிறைவு கிடைத்தது. அவர் அப்படிப் பாத்திரத்தோடு பொருந்தி இருந்தார்.



ஆண் நடனக்கலைஞரும் அதியற்புதமாக ஆடிக்களிப்பூட்டினார். கடவுளர்கள், சகுந்தலை என ஒவ்வொரு ஓவியங்களுக்குமான கதைகள் அற்புத ஆடல்களுடனும் இசையுடனும் அரங்கேறின. பாடல்களை எழுதியவர்களுக்கும் இசையமைத்தவர்களுக்கும் பாராட்டுக்கள். நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய பிள்ளைகளுக்கும் வாழ்த்துக்கள். திரைக்குப் பின் கவிதாவுக்கு உதவிய அத்தனை கலைஞர்களுக்கும் வாழ்த்துக்கள். கவிதாலட்சுமி கலைமகளின் பேரன்புக்குழந்தை. பல்கலை வித்தகி...இன்னும் இன்னும் காவியங்கள் படைக்க நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.•

# இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனாவில் மோசமான பாதுகாப்பு நிலைமை குறித்து நோர்வே குடிமக்களை நோர்வே வெளியுறவு அமைச்சகம் எச்சரித்துள்ளது.



நோர்வே அதிகாரிகள் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய பிரதேசங்களில் உள்ள நோர்வே குடிமக்களுக்கு மோசமான பாதுகாப்பு நிலைமை பற்றிய தகவல்களை தெரிவித்துள்ளனர். ஜெருசலேமில் நடந்து வரும் பல வன்முறை சம்பவங்களுக்குப் பிறகு அந்நாடுகளில் பாதுகாப்பு நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. சோதனைச் சாவடிகள் மற்றும் குறுக்கு வழிகளிலும், நகர மையங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், கலவரங்கள் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று நோர்வே வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அனைத்து பயணிகளும் எச்சரிக்கையுடன் செயல்படவும், உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ள செப வழிபாட்டு ஆலயத்திற்கு வெளியே ஆயுதம் ஏந்திய பாலஸ்தீனியர் ஒருவர் ஜனவரி 27 வெள்ளிக்கிழமையன்று ஏழு இஸ்ரேலியர்களை சுட்டுக் கொன்றார். 28 சனிக்கிழமையன்று 13 வயது பாலஸ்தீனியர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இரண்டு இஸ்ரேலியர்கள் காயமடைந்தனர். அந்த 13 வயது சிறுவன், அவ்வழியே சென்றவர்களால் சுடப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். கடந்த இலையுதிர்காலத்தில் இருந்து, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள நப்லஸ், ஜெனினியில் தங்கியுள்ள அனைத்து பயணிகளுக்கும் வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. ஜெனினில் கடந்த வியாழனன்று இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையில் ஒன்பது பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**பேர்கன் நகரசபையில் சிறுவர், இளைஞர்களுக்கான ஓய்வு நேர பட்டறைகள்**

2023 வசந்த காலத்தில் சிறுவர், இளைஞர்களுக்கான ஓய்வு நேர விளையாட்டுக்கள், பட்டறைகள் போன்ற பயனுள்ள செயற்பாடுகளை பேர்கன் நகரசபை மேற்கொள்ளவிருக்கிறது.

சிறுவர் மற்றும் இளையோர்கள் பாடசாலை தவிர்ந்த தமது ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக கழிக்க வேண்டும் என்ற நோக்கில் பேர்கன் நகரசபை வருடாவருடம் பல செயல்பாடுகளை ஒழுங்குசெய்து வருகின்றனர். அதன் அடிப்படையில் இம்முறையும் பிள்ளைகளை வயது ரீதியாகப் பிரித்து பல நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். ஆர்வமுள்ளோர் கீழே தரப்பட்டுள்ள இணையத்தளத்திற்குச் சென்று தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்

https://www.bergen.kommune.no/innbyggerhjelpen/kultur-idrett-og-fritid/fritid/fritidstilbud/barn-og-unge-kurs-og-verksteder/




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)


எனது தாயாருக்கு கருப்பையில் புற்று நோய் வந்து, அவவை காப்பாற்ற முடியாது இறந்து விட்டார். அந்த கொடிய நோய் பற்றி மற்றவர்களும் அறிய வேண்டும் என்ற நோக்கில் இந்த இதழின் மருத்துவரிடம் சில கேள்விகள். பதில்களை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன்.

கருப்பை புற்று நோய் என்றால் என்ன? இது எல்லோருக்கும் வருமா?

பெண்களின் இனப்பெருக்க உறுப்பின் ஒருபகுதியான கருப்பை பெண்களின் அடிவயிற்றில் காணப்படுகிறது. இக்கருப்பையிலேயே குழந்தை கருத்தரித்து பிரசவிக்கும்வரை வளர்கின்றது. உடலிலுள்ள எல்லா உறுப்புக்களைப் போலவும் கருப்பையிலேயும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புள்ளது.

கருப்பை புற்றுநோயின் அறிகுறிகள் என்ன?

1. மாதவிடாய் தவிர்ந்த நாட்களில் இரத்தப் பெருக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்றுபோன பெண்களுக்கு திடீரென இரத்தப் பெருக்கு ஏற்படுதல்
2. அடிவயிறு ஊதியிருப்பதுபோல் உணர்தல்
3. அடிவயிற்றில் நோ ஏற்படுதல்
4. சிறுநீரில் இரத்தம் கலந்திருத்தல்




இந்த புற்று நோய் வருவதுக்கான அடிப்படைக் காரணங்கள் என்ன?

1. இஸ்திரோயன் என்ற ஓமோனின் அளவு அதிகமாகவுள்ள பெண்களுக்கு கருப்பைபுற்று நோய் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளதாக அறியப்பட்டுள்ளது. இது அதிகமாக இருக்கும் காரணங்கள்,
அ) அதிக உடற்பருமன்
ஆ) இஸ்திரோயன் ஓமோன் குளிசைகளை பாவித்தல்
இ) குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருத்தல்
ஈ) 55 வயதிற்கு பின்பு மாதவிடாய் நின்றுபோதல்
உ) சூலகங்கள் நீர்ப்பையால் நிறைந்திருத்தல்
2. நீரளிவுநோய்
3. பரம்பரையில் கருப்பை அல்லது சூலக புற்றுநோய் இருத்தல்
4. அடிவயிற்றுப் பகுதி கதிர்வீச்சு சிகிச்சைக்கு உள்ளாகியிருத்தல்

இந்த நோயை குணப்படுத்த முடியாதா?

நோயை ஆரம்பகட்டத்தில் கண்டுபிடித்தால் சத்திரசிகிச்சை மூலம் கருப்பையையும் அதனுடன் சேர்த்து இனப்பெருக்க உறுப்புக்களான பலோப்பியன்குழாய், சூலகம் போன்றவற்றையும் அகற்றப்படும். அதன் பின்பு அப்பெண் கருத்தரிக்கும் வாய்ப்பை இழந்துவிடுவார்.
அத்துடன் நோய் கண்டுபிடிக்கப்படும் கட்டத்தைப் பொறுத்து மருந்துகள் மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையும் வழங்கப்படலாம்.

இது பரம்பரை வியாதியா?

பரம்பரையில் கருப்பை, குடல் அல்லது சூலக புற்றுநோய் இருந்தால் கருப்பைப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

அப்படியானால் இந்த நோய் வராது தடுக்க முடியாதா?

உடல்நிறையை குறைத்தல், கிரமமான உடற்பயிற்சி செய்வதன் மூலம் துடிப்புடன் இருத்தல், சுகாதாரமான உணவுப்பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதும், மதுபானங்களைத் தவிர்ப்பதும், கருத்தடை முறைகளைப்பற்றி குடும்பவைத்தியருடன் கலந்தாலோசித்த பின்பு தெரிவுசெய்வது என்பன நோய் வராமல் தடுக்கும் முறைகளாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்



**ப்ரியமதா பயஸ்**

ஒவ்வொரு சமூகமும் ஏதோ ஒருவகையில் பெண்களை அடக்கி ஆளத்தான் ஆசைப்படுகிறது. என்னதான் சம உரிமை சமத்துவம் என பேச்சுக்கு சொல்லிக்கொண்டாலும் பெண்களே பெண்களை அடிமைப்படுத்தவேண்டும் என்று குறியாக இருப்பது இன்னமும் அழியவில்லை, மாறவும் இல்லை,
வடக்கில் காணாமல் போன பல ஆண்களின் மனைவிமார் இந்த சமூகத்தில் தங்கள் வாழ்க்கையை எவ்வளவு நெருக்கடிக்குள் வாழ்கிறார்கள் என்பது எத்தனை குரூரமான வலிகளைக் கொண்டது?

அண்மையில் மிக இளவயதேயான அந்த பெண் சொல்கிறாள்:
“அக்கா எனக்கு மூன்று பிள்ளைகள் ஒரு பெண்பிள்ளை அவள் மூத்தவள், இரண்டு ஆம்பிளை பிள்ளைகள் அவர்கள் இளையவர்கள், மூத்த பிள்ளைக்கு 7 வயது மற்றையவர்களுக்கு ஐந்து, மூன்று என வயது இருக்கும்போது என்கணவர் காணாமல் போய்விட்டார் இப்போது மகளுக்கு இருபது வயதாகிறது, நான் வீடு வீடாக சென்று சமையல் வேலை செய்து கூட்டி துடைத்துதான் இந்த பிள்ளைகள் மூன்றுபேரையும் வளர்த்தேன். அந்த நேரமே எனக்கு ஒரு கல்யாணம் செய்து வைக்க அம்மா அப்பா முயன்றனர் ஆனால் ஊரவரும் உற்றவரும் நாக்கில் பல்லை வைத்து கதை பேசியதால் என் கல்யாணம் எல்லாம்குழம்பிப் போய்விட்டது. நான் யார் வீட்டுக்கு வேலைக்குப் போகிறேனோ அங்கே என்னை பற்றி தவறாக சொல்லி என் வேலையை கெடுத்து விட்டு, அந்த வீட்டில் இருக்கும் ஆண்களோடு அவர்கள் எந்த வயது நபர்களானாலும் பரவாயில்லை அவர்களை என்னோடு கதைகட்டி வைப்பார்கள், எல்லாவற்றையும் கடந்து தாங்கிக்கொண்டு என் மூன்று பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி விட்டேன். அவர்கள் எல்லோரும் நன்றாக படிக்கிறார்கள்” என சொல்லும்போது தலையை கீழே குனிந்துகொள்கிறாள்,
தாரை தாரையாக வழியும் கண்ணீர், அவளின் கால்களை நனைப்பதை நான் மட்டுமே பார்க்கிறேன், யார் இறந்தாலும் ஓடிவராத கண்ணீர் அன்று என் கண்களுக்குள்ளும் ஊற்றெடுத்து வந்துவிட்டது.

ஒரு சமூகம் ஒரு பெண்ணை எவ்வளவுக்கு பாலியல் ரீதியில் கேவலமாக விமர்சித்து தங்கள் பொழுதை போக்குகின்றார்கள் என்று பார்க்கும்போது இந்த சமூகத்தில் மிக மோசமான கோபமே வந்தது எனக்கு, கணவன் இல்லாமல் மூன்று பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவது என்பது எவ்வளவு கஷ்டமான விடயம் இப்போதைய காலத்தில் கணவன் மனைவி என இரண்டுபேர் உழைத்தாலும் வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத இக்கட்டான சூழலில் தனியே ஒருத்தியாக இத்தனை புறவுலக சவால்களை தனியே கடந்து மனதை தானே சமாதானம் செய்து பிள்ளைகள் முன் அழுதுவிடகூடாது என்ற ஓர்மத்துடன் வாழ்க்கையை கடப்பது என்பது அவ்வளவு இலகு இல்லை.



ஒவ்வொரு நாளும் விடியும் போது மனம் கனக்கும் பொழுதாகவே அவர்களுக்கு விடிகிறது, முன்னுக்கு வராதே, எல்லோரும்போனபிறகு வீட்டில் இருந்து வெளிக்கிட்டு, நீ முழுவியளதுக்கு முன்னுக்கு வரக்கூடாது, உன்னில் முழித்து போனால் காரியம் சரியாகாது என்கின்ற பழைய புராணங்களை எல்லாம் இந்த வாழ்விழந்து வாழ்க்கையில் அல்லாடும் பெண்களிடம்தான் இந்த சமூகம் திணிக்கிறது.

கட்டுப்பாடுகளையும், இல்லாத சம்பிரதாயங்களையும் எங்கள் வம்சத்தின் பண்பாடு, எங்கள் சமூகத்தின் நடைமுறை என்று விதவை பெண்களிடம்தான் அவற்றை திணிக்கின்றனர். இதெல்லாம் மிகப் பெரும் அவமானம் என்று தெரிந்தும், பெண்களை அடக்கி ஆளவேண்டும் அல்லது பாலியல் அடிமைகளாக்கி விடவேண்டும் என்ற நோக்கில் அவர்களிடம் மிக மோசமாக நடந்து அவர்களை புண்படுத்தும் வேலைகளையே எம் சமூகம் இன்றுவரை செய்கிறது. விதைவையான ஒருபெண் வேலைக்கு போவது பாலியல் தொழில் செய்யத்தான் என்கின்ற மட்டமான சிந்தனை இப்போதும் எங்கள் சமூகத்தில் வேரோடிய அழுக்காக படிந்துதான் இருக்கின்றது.



இப்படியான சிந்தனைகளை எங்கள் சமூகம் எப்போது தூக்கி எறிகின்றதோ அப்போதுதான் எங்கள் சமூகத்து பெண்களும் தலைநிமிர்ந்து வாழும்காலம் வரும்.

(தொடரும் )

# உதவும் கரங்கள்



நோர்வே பேர்கன் நகரில் 1989ம் ஆண்டிலிருந்து எமது தாய் நாட்டில் அல்லலுறும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி, அவர்களது துயர் போக்க அர்ப்பணிப்போடு இயங்கி வரும் **உதவும் கரங்கள்** அமைப்பு தமிழர்களது திருநாளாம் பொங்கல் திருவிழாவினை கடந்த ஜனவரி 21ம் நாளன்று மிகவும் சிறப்பாக கொண்டாடியது.

பேர்கனிலுள்ள கலை நிறுவனங்கள் தமது மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையில் பல சிறந்த கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி மக்கள் மனங்களை கவர்ந்தனர்.
சிறுவர்கள், இளையோரின் இசை, நடன, புல்லாங்குழல் நிகழ்ச்சிகள் மற்றும் மகளிரின் வில்லுப்பாட்டு போன்றன சிறப்பாக அரங்கேறியது.

1989ம் ஆண்டில் உதவும் கரங்கள் அமைப்பு நோர்வே பேர்கன் நகரில் சில நல் மனம் கொண்ட இளைஞர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய காலத்தில் அதனது தேவை ஈழ தேசத்துக்கு அதிமுக்கியமாக தென்பட்டது.
ஈழப்போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வறுமையும், நோயும், கல்வி தொடர முடியா நிலைமைகளும் தொடர்ந்தன. அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாது தாயக மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர்.



பெற்றோரை இழந்த குழந்தைகளது துயர நிலை...
கணவரை இழந்த பெண்களது அவலநிலை...
தாக்குதல்களினால் அங்கவீனர்களாகிய இளையோர் யுவதிகளின் துன்பநிலை... இவ்வாறான செய்திகள் பல தொடர்பு ஊடகங்கள் வழியாக புலம்பெயர் மக்களை வந்தடைந்த வேளையில் தான் **உதவும் கரங்கள்** அமைப்பு உருவானது.

இதனது செயல்பாடு தற்பொழுதும் நடைபெற்று வருகிறது. அதே வேளை இதனது கிளை லண்டன் மாநகரிலும் இயங்கி வருகிறது. அதற்கான மிக முக்கிய காரணம் திரு. சின்னத்தம்பி



சந்திரமோகன் என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். சந்திரமோகன் அவர்களே உதவும் கரங்கள் அமைப்பு பேர்கன் நகரிலும் ஆரம்பிக்க முன்னின்றவர். நீண்ட காலப்போரும், இயற்கை அனர்த்தமும் தாய் மண்ணில் ஏற்படுத்திய வடுக்கள் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. முட்கள் நிறைந்த அப்பாதைகளில் நடந்த உறவுகளின் துயர் போக்க உதவும் கரங்களின் உழைப்பும், பணியும் அவசியமானதே. உதவும் கரங்கள் தொடர்ந்தும் தமது உதவிகளை நமது தாயக மக்களுக்கு புரிய வேண்டிய பொறுப்பிலுள்ளது. அதற்கு உங்களது உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கிறது. உங்கள் பண உதவியினை வங்கி இலக்கத்துக்கோ அல்லது Vipps இலக்கத்துக்கோ அனுப்பி வையுங்கள்.

உங்கள் ஆதரவுக் கரங்களைத் தாருங்கள்.
உதவி புரிய விரும்புவோர் உதவும் கரங்கள் அமைப்பினருடன் தொடர்பு கொள்ளவும்.

Vipps nr: 734277
Bank Konto: 1506 7495 079
Mobil nr: 922 23 396

# Bergen vest விளையாட்டுக்கழகம் 1988






Bergen vest விளையாட்டுக்கழகம் 1988ம் ஆண்டிலிருந்து Bergen நகரில் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட, துடுப்பெடுத்தாட்ட போட்டிகளை நடத்தி வருகிறது. அண்மைக் காலமாக நோர்வே மற்றும் ஐரோப்பா தழுவிய ரீதியில் மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறது. அதேவேளை தமக்கென பல அணிகளை உருவாக்கி வாராவாரம் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றனர்.
சிறுவர், இளையோர், பெரியோர் மட்டுமல்லாது பெண்களுக்குமான விளையாட்டு அணிகளை கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

2023 ஜனவரி 7, 8ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் கிண்ண உதை பந்தாட்டப் போட்டியில் Bergen vest கழக அணிகள் கலந்து விளையாட 50க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், பாதுகாப்பாளர்கள் Bergen நகரிலிருந்து விமானம் வழியாக Oslo சென்று விளையாடி சில வெற்றிகளையும் தட்டிக்கொண்டு திரும்பியுள்ளனர். கடந்த காலங்களில் இருந்து பல விளையாட்டு அணிகள் ஒஸ்லோ நகர் சென்று விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று வந்திருந்தாலும், இதுவே முதல் தடவையாக 50க்கும் மேற்பட்ட வீரர்கள் ஒன்றாக ஒரு அணியின் கீழ் சேர்ந்து சென்றனர்.



17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் Bergen vest அணி மிகச்சிறப்பாக விளையாடி வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டு கழகத்திற்கு இன்னும் பலம் சேர்த்துள்ளது. தற்கால சூழலில் இளையோர், சிறுவர்கள் அனைவருமே வீடுகளுக்குள் முடங்கி டிஜிட்டல் வழியில் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டு தமது உடற்பயிற்சியில் கவனம் கொள்ளாது தமது இனிமையான ஓய்வு நேரத்தினை பாழாக்கி வருகிறார்கள். இந்த சூழலில் Bergen vest போன்ற கழகங்கள் முன்னெடுக்கும் விளையாட்டு செயல்பாடுகள் நம் சமூகத்துக்கு அதி முக்கியமானது.

பேர்கன் நகரில் இன்னும் பல உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகள் உள்ளன. அவைகளுள் Tiki Taka அணியும் ஒஸ்லோ மாவீரர் கிண்ண போட்டியில் கலந்து அரை இறுதியாட்டப் போட்டிவரை முன்னேறினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. •

# இலங்கையில் பற்றாக்குறையாக உள்ள 43 புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள்

இலங்கையில் இன்று ஏராளமான மக்கள் புற்று நோயினால் தாக்கப்பட்டு வருகிறார்கள். இந்நோய்க்கான எதிர்ப்பு மருந்துகள் பற்றாக்குறையாகவே உள்ளன. எனவே 43 வகையான புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் அடுத்த மாதம் பெற்றுக்கொள்ளப்படும் என இலங்கை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன்கள் மற்றும் உலக வங்கியின் மானியத்தின் கீழ் இலங்கையில் இந்த மருந்துகள் பெறப்படுவதாக அதன் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார். இலங்கைக்கு அரிதான மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பான முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடலின் போதே இந்த தகவல் வெளியாகியுள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த மருந்துகள் கிடைக்கும் வரை, மஹரகம வைத்தியசாலை உட்பட தீவின் புற்றுநோய் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு அதிகபட்ச முகாமைத்துவத்துடன் மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## வாசகர் குரல்

பெருமிதம் கொள்கின்றேன். கடந்த இரண்டு வருடங்களாக "தேன் தமிழ் இதழின்" நிரந்தரமான, விருப்பமான, ஆர்வமுள்ள வாசகர்களில் நானும் ஒருவன்! நோர்வே நாட்டிலிருந்து, எம் தாய்மொழி தமிழில் மாதாந்தம் வெளிவரும் ஒரேயொரு இதழ் என்ற சிறப்பையும் தாண்டி, அது அள்ளிவருகின்ற அத்தனை பதிவுகளும் அருமையிலும் அருமை! செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், சிறு-கதைகள், மருத்துவ ஆலோசனைகள், சிறுவர்களுக்குரிய பக்கங்களினுடனான வர்ணச்சித்திரங்கள், பலபல அரிய சிந்தனைகளென அனைத்தும் குறைந்த பக்கங்கள்கொண்ட இந்த இதழில் நிரம்பிக்கிடப்பதைக் காண்கின்றேன்..!

அதுமட்டுமல்ல அர்த்தமுள்ள, அழகிய அத்தனை அட்டைப்படங்களும், அவை வர்ணத்தில் ஜொலிக்கின்ற காட்சிகளும் கண்களுக்கு மிகவும் குளிர்ச்சியும், ஆனந்தமும் கொள்ள வைக்கின்றன! "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவனின் குறளுக்கு அமைவாக, ஆசிரியர் யூலியஸ் அவர்கள் தான்பெற்ற கல்வியையும், தமிழ்ப்புலமையையும், தமிழ்ப்பற்றையும் இந்த இதழின்மூலம் தமிழ்மக்களுடன் பகிர்ந்துகொள்வதை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றேன்..! வாழ்க உங்கள் தொண்டு!! வளர்க எம் இனிய தமிழ்மொழி!! "தேன்தமிழ்இதழ்" அன்புவாசகன்.

**டேவிட் மரியாம்பிள்ளை,** பேர்கன், நோர்வே




## குறிப்பு:1

இலங்கையின் இனப்பிரச்சினையை பைனரி மனநிலையில் அணுகுவது சிறுபான்மை மக்களின் ஒரு மூலோபாயம் சார்ந்த குறைபாடு. இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் மிகவும் தெளிவாக பௌத்தம் மற்றும் பௌத்தம் அல்லாத ஏனைய மக்கள் என்று பிரிகோடு போடப்பட்ட பின்னர். பௌத்தர்கள் அல்லாத ஏனைய சிறுபான்மையினர் அவர்களுக்குள் ஒற்றுமையுடன் செய்யப்படுவது மட்டுமே உண்மையான தீர்வினை பெற்றுக் கொள்ள வழி திறக்கும். இனத்துவம் மகத்துவம் சார்ந்த பிரிகோடுகள் தமிழ் மொழி பேசும் எம்மை மிகவும் மோசமான பிரிவினை மனநிலையில் வைத்திருக்கும் நிலையே பேரினவாதத்திற்கு பெரும் வரப்பிரசாதம்.



தமிழ் பேசும் மக்களில்,

**வடகிழக்கு பிராந்தியத்தில்**

1) தமிழர்கள் (இந்து/ கிறிஸ்தவம்)
2) முஸ்லிம்கள்(இலங்கை சோனகர்/ மலாயர்கள்)
3) பறங்கியர்கள்

**வடகிழக்கு பிராந்தியத்திற்கு வெளியே தமிழ் பேசி வாழும்**

1) தமிழர்கள் (மலையகத் தமிழர், கொழும்பு தமிழர்கள், தலைநகர் வாழ் வடகிழக்கு தமிழர்கள்)
2) முஸ்லிம்கள் (இலங்கை சோனகர்/ மலாயர்கள்)
3) பறங்கியர்கள்
4) குஜராத்தை பூர்வீகமாகக் கொண்ட போரா மேமன் கோஜா முஸ்லிம்கள்

அனைவரும் தங்களின் மத அடையாளங்களை விட தமிழ் மொழியை முதன்மையாக ஒன்றுபடுத்தும் காரணியாகக் கொண்டு புதிய தீர்வுப் பரப்புகளை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மூன்றாவது இலங்கையனும் இன மத மொழி ரீதியாக ஏதோவொரு வகையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையை பொதுமனநிலையில் பதிக்க வேண்டும்.

எண்ணிக்கையில் குறைந்த மக்கள் தமக்குள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் பாரிய அடைவுகளை உலகில் அடைந்துள்ளார்கள் என்பதை நமது சிறுபான்மை மக்களின் பொதுப் புத்தியில் ஏற்ற வேண்டும்.

## குறிப்பு:2



இலங்கையில் சமோசாவை அறிமுகம் செய்தது சம்மாங்கோட்டு பள்ளிக்கு முன்னால் ஒரு குஜராத் பெருமகனால் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பம்பாய் சுவீட் கடை. பின்னர் தாவூத்பாய் குடும்பம் அதை கொள்ளுப்பிட்டி வெள்ளவத்தை போன்ற இடங்களில் கொண்டு போய் சேர்த்தார்கள். கொழும்பு முழுவதும் பல பம்பாய் சுவீட்ஸ் கடைகள் இப்போது இருந்தாலும். குஜராத்தை பூர்வீகமாகக் கொண்ட போராக்கள் நடத்தும் பம்பாய் சுவீட்ஸ் சுவையையும் தரத்தையும் யாரும் எட்ட முடியாது. ஐந்து வயதில் சுவைத்த சம்மாங்கோடு பள்ளி இரண்டாம் குறுக்குத்தெரு பம்பாய் சுவீட்ஸ் சமோசாவின் சுவை இன்று வரை எனது மெமரியில் உள்ளது. அவித்த மின்ஸ்ட் இறைச்சியுடன் வெங்காயம் பச்சை மிளகாய் புதினாவுடன் மசாலா சேர்த்து நெய்யில் வறுத்து எடுத்த கீமாவை உள்ளீடாக கொண்டு பதமாக மாவில் செய்த wrapping இல் செவ்வனே சரியான சர்வசமனான முக்கோணமாக சுற்றி பொரித்து எடுத்தால் தரமான நாவுக்கு இதமான சமோசா ரெடி.
சமோசா இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது மத்திய ஆசியாவில் இருந்து.
தஷ்கண்ட் நகரே சமோசாவின் பிறப்பிடம். பாரம்பரியமாக அங்கே தந்தூரில் சமோசா பேக் செய்யப்படுகிறது. இந்தியாவில் டில்லி சுல்தானகம் இருந்து போது சமோசா பரவியது. பாரசீக பெருங் கவிஞன் வரலாற்று ஆசிரியர் அமீர் குஸ்ரோ சமோசாவை பாடியுள்ளார். முஹம்மத் பின் துக்ளக் தன்னை சமோசா கொண்டு உபசரிப்பு செய்ததாக இபுனு பதூதா குறிப்பிடுகிறார். முகலாயர்கள் பிரியாணியை போலவே சமோசாவையும் தங்கள் சாம்ராஜ்யம் முழுவதும் கொண்டு சென்றார்கள்.
சமோசா என்ற சொல்லின் etymology sambosang என்ற பாரசீக பெயரில் வருகிறது
Literally it is "triangular pastry" என்று அர்தப்படுகிறது. சமோசா அரபுலகில் சம்பூசாக்ப என்று அழைக்கப்படுகிறது.
உலகில் சமோசாவை தடைசெய்த ஒரே நாடு சோமாலியா அங்கே இயங்கும் அடிப்படைவாத தீவிரவாத கும்பல் அல் 'பாப் சமோசா முக்கோண வடிவில் கிறிஸ்தவ மதத்தின் Trinity doctrine இனை ஞாபகப்படுத்துவதால் அதை முஸ்லிம்கள் உண்ண கூடாது என்று தீர்ப்பு வழங்கி வேறு உள்ளார்கள். ஞானசூனியங்கள்.

## குறிப்பு:3





2023 இல் இந்திய Media and Entertainment Industry 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பின்னணியில் 10% சந்தையை கொண்ட தமிழ்நாடு ஆகக் குறைந்தது 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டும். பொங்கல் அன்று ரிலீஸ் ஆன வாரிசு மற்றும் துணிவு திரைப்படங்கள் தொடர்பாக இரு தரப்பினரும் விளம்பர பரப்புரையை பரபரப்பு மிக்கதாக ஆக்கி இதை கனகச்சிதமாக செய்து முடித்துள்ளனர். இந்த இரண்டு படங்களும் இரண்டு நாட்களுக்குள் ஒரு பில்லியன் ரூபாய்களை அள்ளியுள்ளன.
இதிலே துணிவு 52% வசூலையும் வாரிசு 48% வசூலையும் தக்க வைத்துள்ளன. ஆக மொத்தம் தமிழ்நாட்டின் சினிமா புதிய culture export business strate பல பரீட்சார்த்தமாக செய்து வெற்றி பெற்றுள்ளது.

# செக்கலில் கடலோரச்சுவையும் வலியும் குழைத்து ஒரு கவளம்...

-கீதா ரவி.




“சூரியனைத் தின்றவர்கள்” கவிதைப்புத்தகத்தை எதேச்சையாக வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நிறுத்தாமல் தொடர்ந்து படித்து முடிக்க வைத்த புத்தகம். அலையோடு உறவாடி ஆழியோடு கதை பேசி... ஆழிமாதாவின் இன்ப துன்பத்தையும், அவளை உயிராக நேசிக்கும் ஒரு ஆன்மாவின் இராகத்தையும், அகக்குமுறல்களையும், வலிகளையும், காதலையும், இயற்கை நேசிப்பினையும் உணர வைக்கும் ஆழிக்காவியம். தமயந்தி வாசகர்களுக்குள்ளும் இவ்வுணர்வுகளைப் புகுத்தி விடுகிறார்.

ஒரு காலத்தில் புத்தகங்களிடையே புதைந்து கிடந்த நான் நீண்ட வருட மனவுளைச்சல்களினால் பொறுமையாக ஒரு புத்தகம் முழுமையாக வாசிக்க முடியாமல் இருந்தேன். அதனால் புத்தகங்கள் வாங்குவதே இல்லை. கிடைத்தவற்றை அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் படிப்பேன்... ஒரே தடவையில் வாசித்த புத்தகம் “சூரியனைத் தின்றவர்கள்”.

நான் கடலருகில் வாழாவிட்டாலும் கடல்மேற் பெருங்காதல் கொண்டவள். பெரும் இயற்கை நேசிப்பாளினி. படத்தைப் பார்த்ததுமே புத்தகத்தை வாசிக்க வேண்டுமெனும் ஆவல் தோன்றியது. கவிதைகளைப் படித்து விட வேண்டுமெனும் ஆர்வத்தில் பதிப்புரை, முன்னுரை விமர்சனங்கள் யாவற்றையும் கடந்து சென்று கவிதைகளுக்குள் நேரடியாகப் புகுந்தேன்.
“Welcome drink” நல்வரவுப் பானம் எனும் வரவேற்புடன் ஆரம்பித்தது கவிதை.
“எதுவும் நடந்தேறாதது போல்/ மௌனித்துக் கிடக்குமிந்தக் கடலுக்குள்/ மருந்தறியாக் காயங்களும்/மடிப்பெட்டி நிறையக் கதைகளும் உண்டு“ எனும் வரிகளுடன் “சற்றிதன் கரையில் அமர்ந்து அவதானியுங்கள்” என வேண்டுகோள் விடுத்து அதே நேரம் “துளியளவு துக்கபரிகாரம் வேண்டிய எந்தவொரு வார்த்தைகளும் அதனிடம் இல்லை” என்று சொல்லி கடலில் நீச்சல் அடிக்க கடல் உங்களைக் காதலோடு வரவேற்கிறது என்கிறார்.

“இறுதியாகப் பேச விடுங்கள்” எனும் கவிதையில் “நான் நிலவொளியில் தோணியில் மிதந்தபடி அவள் மடியில் வளர்ந்தவன். கடலைன்னையிடம் இறுதியாக என்னைப் பேச விடுங்கள்” என்கிறார்.
கடல் பேசுமா? என்பதற்கு ஆம் எனக்கூறி “பேசுவாள், பாடுவாள், கவிர் ஆடுவாள், சிரிப்பாள், சூடுவாள். மடியமர்த்தி பசியாற மார் திறப்பாள். தீவுக்கரையெல்லாம் தீயெறியும் சூரியனை மறைத்துக் குடை விரிப்பாள்” எனக் கடல் கீதம் பாடி, அவளைக் கூறு போட்டு நீங்கள் ஏழேழு ஜென்மத்துக்கும் சேர்த்த பாவப்பொட்டளிகளால் அவள் குமுறிக் கூத்தாடுமுன் உங்கள் சந்ததிக்காக இறுதியாக என்னை அவளுடன் பேச விடுங்கள் என்கிறார்.

“முண்டஞ்சுறா” எனும் கவிதையில் சூரியன் மறையும் நேரத்தில் கடல் உள்வாங்கித் தரையாக இருந்த இடங்களுக்கு புறவாய் ததும்ப நீர் பெருக்கெடுக்கும் போது நிகழ்பவற்றை கடலோரச் சொல்லாடல்களால் அழகு சேர்த்து கற்பனையில் எம்மையும் அங்கு அழைத்துச் செல்கிறார். இந்த அழகியலைக் கலைத்துப் போட முண்டஞ்சுறாக்கள் வருவதை வலி மிகுந்து சொல்கிறார். முண்டஞ்சுறா என்பது மூவாயிரம் பற்களைக் கொண்ட

இராட்சத வெள்ளைச்சுறா. அவற்றை வல்லமை பொருந்திய ஆழி வேதாளங்கள் எனக் குறிப்பிடுகிறார். இந்த முண்டஞ்சுறாக்களை கடலைச் சூறையாடும், கடற்சூழலை நாசமாக்கும் மானுடர்களுடன் ஒப்பிடுகிறார். இந்த முண்டஞ்சுறாவுக்கு ஒப்பானவர்களிடமிருந்து கடல்மாதாவைக் காப்பாற்றத் துடிக்கிறார்.

“அஃப்ரோடித்” கவிதையில் அஃப்ரோடித் இளவரசியின் தேவதைத் தோற்றமும் அவளது கடலோரப் பூங்காவும் அகக்கண்ணில் காட்சிகளாக மலர்கின்றன. ஆயினும் கடலன்னை மகளின் சில சொற்பதங்கள் எனக்குப் புதிதானவை. கொக்குப்பிட்டிக் குண்டு மணிகள், ஆழி மலர்கள், சூரியப்பூச்சிகள், சாட்டமாறு மரங்கள், மேலும் சில சொற்கள். அவை எப்படி இருக்குமெனத் தெரியாது ஆனால் அவற்றை கற்பனை உருவாக உருவகப்படுத்தி பார்க்க முடிகிறது. கவிதையில் மந்தைகளை வைத்திருந்தவர் அவள் பின்னே கட்டுண்டு போவது போல நாமும் கட்டுண்டு தொடரும் போது கோடைக்கொண்டல் வந்து யாவற்றையும் அழித்துப் போடு-வதின் வலியை உணர முடிகிறது.
“இளவரசி அஃப்ரோடித்/ கடலில் எழுந்து வந்த போது/ கொண்டலின் கோத்திரக்காரர்/ நடுத்துறைப் பாறையில் இருந்த/ அவள் சூரியனை/ தாறுமாறாய்ப் பிய்த்தெடுத்து/ தின்று கொண்டிருந்தனர்”
இங்கே கோடைக் கொண்டாலாகவும் அதன் கோத்திரக்காரராகவும் கடற்தாய்க்கு கேடு செய்வோரை குறிப்பிடுகிறார்.

“வண்ணத்துப் பூச்சிகளை வேட்டையாடுதல்” கவிதையில் கடலைச் சாட்சியாக வைத்துப் போருக்கு முன், நடுவில், பின் என எக்காலத்திலும் அப்பாவிச் சனங்களின் அவலத்தைக் காட்டுகிறார்.
“நச்சுப் புற்றுகளுக்குக் காவலாக/ நீண்ட நெடும் யுத்த நெருப்பினுள்/ பட்டு நொந்து கெட்டொழிந்த சனங்கள் மீது/ பட்டயம் எழுதி வைத்தார்கள்”
மேலும்
“வண்ணத்துப்பூச்சிகளை வேட்டையாடும் எல்லா உரிமங்ககளையும் துறவிகள் தங்கள் அங்கிப் பைகளுக்குள் கொண்டு திரிந்தார்கள்” “வேட்டைகள் பூமியெங்கும்/ மலிந்தவையாகின” என வலி சுமக்கின்றார், நம்மையும் வலி சுமக்க வைக்கின்றார்.
“சமாதிகளைச் சுமப்போர்” எனும் கவிதையில் நெய்தல் நிலம் அபகரிக்கப்படுவதை சுட்டுவதாக
“ஒரு கவளம் பருக்கைக்கு/ அலையாய் அலைகிற கரைகளில்/ மூச்சு விடவும் மூச்சைத் திரும்பப் பெறவும் அனுமதி மறுக்கப் பட்டதாக/ திருடப்படுகிறது காற்றுவெளி” எனும் வரிகள் அமைகின்றன.

“மௌனத்தோடு அவள் காத்திருத்தல்” எனும் கவிதையில் காதலையும், புலப்பெயர்வையும், பிரிவையும், வார்த்தை தவறியதின் வலியையும் கடலோரச்சுவையும் வலியும் கலந்து குழைத்து ஒரு கவளம் தருகிறார் ஆசிரியர். அது நாவில் சுவையாகத் தொடங்கி தொண்டையில் துக்கப்பந்தாக இறங்கி நெஞ்சை அடைக்கிறது.
“தலைகள் கொய்தெறியப்பட்ட/ தணுவில் தென்னைகளை/ தளநார் இல்லாமல் ஏறிக்கொண்டிருந்தது/ முகமுடைந்த நிலவு”

“நாடு கடத்தப்பட்ட நாட்தொட்டு/ அவளது மௌனத்தின் குரல்கள்/ வீச்சுளாத்திக்காற்றிலும் அலையிலுமாக/ வந்து வந்து போம்”
“நானோ வார்த்தை தவறிய கடன்காரனாக/ ஈரத்தெரு நீளம் நடக்கிறேன்”
இது போல மேலும் பல கவிதை வரிகள் படித்து மனம் இரசிப்பில் கரைய, இளக, வலிக்க, குமுற, ரௌத்திரம் கொள்ள என உணர்வுகளை தட்டியெழுப்பிச் செல்கின்றன.

படித்து அனுபவித்ததை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். பதிவு நீண்டு விடும். ஒவ்வொரு கவிதையும் சிறப்பு. கவிதைகளூடாக வாசகர்களாகிய நீங்களும் கடலோர ஈரக்காற்றின் வாசனையை நுகருங்கள். இந்தப் புத்தகத்தை ஒரு முன்னந்தி நேரம் கடற்கரை ஈரமணலில் ஒருக்களித்து சாய்ந்து கிடந்து அலையோசை நாதத்துடன் படிக்க வேண்டுமெனத் தோன்றுகிறது... “சூரியனைத் தின்றவர்கள்” ஆகச் சிறந்த கடலோரக்காவியம் என்பதில் எந்த ஐயமும் இல்லை.
தமயந்தி அவர்களின் மேலும் பல படைப்புகளுக்காகக் காத்திருப்போம். •

# உதவும் கரங்கள் 34ÅR





எமது தாய் நாட்டில் அல்லலுறும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி, அவர்களது துயர் போக்க நோர்வே பேர்கன் நகரில் 1989ம் ஆண்டிலிருந்து அர்ப்பணிப்போடு இயங்கி வரும்

**உதவும் கரங்கள்**

அமைப்பு தமிழர்களது திருநாளாம் பொங்கல் திருவிழாவினை கடந்த ஜனவரி 21ம் நாளன்று மிகவும் சிறப்பாக கொண்டாடியது.

உதவும் கரங்கள் தொடர்ந்தும் நமது தாயக மக்களுக்கு உதவிகளைப் புரிய வேண்டிய பொறுப்பிலுள்ளது. அதற்கு உங்களது உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கிறது.

Vipps nr: 734277
Bank Konto: 1506 7495 079
Mobil nr: 922 23 396



Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585 (Print ISSN: 2703-8785)